உ

கடவுள்துணை.

சர்வே ஓடம் என்கிற

# டிமார்க்கேஷன் ஓடம்.

திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமகு

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என், சி.

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.

---

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீகதை, குலோபகாவலிகதை நான்கு பக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் செலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவதுமன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகாஅற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

கடவுள் துணை.

## சர்வே ஓடம் என்கிற

# டிமார்க்கேஷன் ஓடம்.

ஏலேலோ அளவுகப்பல் கோவிந்தா

ஏலேலோ சர்வேகப்பல்.

கும்பெனியான் கூட்டங்கூடியெங்கும் சர்வே செய்யவேணுமென்று சாகுபடி நிலங்களெல்லாம் சாவியென்று ஒழிக்கிறார்கள் கிராமத்தார்கள் கணக்கர்களும் செய்யும் சூதுகளைக்கண்டறிந்து டிமார்க்கேஷன் செய்யவென்று சர்வே அமினுக்கள் ஏற்படுத்தி.

முடுகு.

அவர்களுக்குத் தகுந்தபடி சம்பளங்கள் போட்டு ஸ்ரீரங்கம் சேர்ந்ததொரு திருச்சினுப்பள்ளி நாகூர்நாகப்பட்டணம் தஞ்சாவூர் சீமை ஆனைமலை சேனைமலை மதுரகிரிஜில்லா திருவாங்கூர் ஜில்லா கோலார்கள் சீமைகண்டி கள்ளிக்கோட்டை கொச்சிமலையாளம் நீலகிரி பாலக்காடு கோயம்புத்தூர் ஜில்லா சேலத்திற் சேர்ந்ததொரு

சேர்வராயமலைகள் கோலாருமைசூர் குடகு பெங்களூர் சீமை கடப்பைசில்லா குத்திபல்லாரி கிருஷ்ணைதிதீ ரம் கன்னனூர் சீமை சித்தூர் ஜில்லா வெங்கடாத்திரி துங்கபத்திரி அறணமுள்ள சீமை கூடலூர் மஞ்சகுப் பம் செங்கற்பட்டு ஜில்லா சென்னப்பட்டணம் சித்திர கூடம் நெல்லூர் சீமை திருநெல்வேலி அனந்தசயனம் ராமராஜாசீமை ராஜமஹேந்திரம் ஹைதராபாக்கம் சிக் காகுளம்சீமை கன்னனூர் திருத்தலையூர் கம்பரசம்பே ட்டை சேகப்பூர் நாகப்பூர் சிங்கப்பூருடனே எங்கும் சி ங்கக்கொடிகட்டி செங்கோல் செலுத்தவந்த சீமையுடை ய இராணிக்கி உண்டான தேசங்களெல்லாம் சில்லாக்க ளானதொரு சீக்கிரத்திலளக்க கட்டாயம் கட்டியே நில ங்களுக்கு தற்கால்தும் கொடுத்து பயிரிடாத பாருகள் ஆறுகள் ஓடைகள் புரம்போக்கு நிலங்களை கணக்கிலே தள்ளி ஒருவர்நிலங்களைஒருவர்சேர்த்துக்கொள்ளாமலே சுத்திவந்துகட்டி கூடயிருந்து உதவிசெய்ய குமஸ்தாக்க ளுடனே குதிரைகள் வண்டிகள் கூட்டத்துடனே சேவு கன்குடியிருக்க யிடங்களும் கச்சேரிஜாகாகுலோப்புகள் கொண்டுவந்து மேலாகக்கட்டி குரிச்சு முதலானதொரு ட்டில்களும்போட்டு சாமான்கள் தரோடல்தும் ஊத்தி

யாய்வரவே ஸ்நானமது பண்ணியே மடிகட்டிக்கொண்டு போஜனங்கள்பண்ணியே தாம்பூலங்கள் போட்டு வெளுப்பான வேஷ்டியை இடுப்பிலே யுடுத்தி அங்கவஸ்திரம் மேல்போட்டு உருமால்பிடித்து ஜால்கட்டுஉடனாக நிலை அங்கிரோட்டு சரிகைநகை உருமாலைதலையிலேகட்டி சர்வேபிளான்களை கையிலே பிடித்து அளவுக்கு புறப்பட்டார் ஆயிரம்பேர்கள் தப்புகளடிக்கவே கொம்புகளூதவே மரங்களது செடிவெட்ட மண்வெட்டி கொடுவாள் கணக்கப்பிள்ளைமணியக்காரன் கைகட்டிநிற்க உத்தாறி தோட்டிமார் உடன்வந்துசுற்ற சங்கிலிபிடித்து அளக்க தோட்டிகளும்வரவே அளக்கவந்தபூமியிலே அமீனாரும் வந்து கட்டாயம்கட்டியே ஜண்டாக்கள் நிறுத்தி கைகாட்டி முட்டிலே முளைசிவி யிருத்தி சங்கிலிபோகிறவழி செவ்லைவபடுத்திக் கொண்டு நாலுபக்கம் அளவுபார்த்து நூல்களையெழுதி ந்ஞ்சைபுஞ்சை தானளந்து பவுண்டேரியெடுத்து அமினாக்களுமேலாக இனிஸ்பெக்டர்துரையவர்கள்வந்து சோதனைகள்பண்ணியே தர்காஸ்துகுடுத்து சாம்பல்தான்பிடித்து வர்ணங்களெழுதி வாராதபேர்களுக்குஅபராதம்போட்டு சீனிகண்ணாடியும்செங்கோ

லுங்கொண்டு டிக்டெரிவேலைபார்த்து பவுண்டெரியெடுத்து சீமையுட இராணிக்குண்டான தேசங்க ளெல்லாம் சில்லாக்களானதொரு சீக்கிரத்திலாள,

ஏலேலோ அளவுகப்பல் கோவிந்தா சர்வேகப்பல் ஏலேலோ-ஏவிலலோ.

சர்வே ஓடம் என்கிற

டிமார்க்கேஷன் ஓடம்

முற்றிற்று.

---

கடவுள் துணை.

# கா ய க ப் ப ல்.

ஏலேலோ ஏகரேதம் சர்வரேதம்
பிருமரேதம் ஏலேலோ ஏலேலோ.

பஞ்சபூத பலகைகப்பலாய்சேர்த்து பாங்கான ஓங்குமரம் மாமரம்சுட்டு நெஞ்சுமனம்புத்தி ஆங்காரஞ் சித்தம் மானாபிமானங் கயிராகச்சேர்த்து அஞ்செழுத்தைக் கட்டிசரக்காகவேற்றி ஐம்புலந்தன்னிலே சுக்காநிறுத்தி நெஞ்சுகடாக்ஷத்தால் சீனிப்பால்தூக்கி சிவனுடையதிருப்பொருளை சிந்தையில்நினைந்து தஞ்சலானந்த வெள்ளத்தில்தானே அகண்டரதம் போகுதடா ஏலேலோ ஏலிலலோ. (௧)

களவையுங்கேழ்வையுந் தள்ளுடாதள்ளு, கருணைக்கடலிலே தள்ளுடாகப்பல், நிற்குணந் தன்னிலே தள்ளுடாதள்ளு, நிறைந்தபரிபூரணத்தால்தள்ளுடாகப்பல், மூக்கணை மூன்றையுந் தள்ளுடாதள்ளு, முப்பாழுக்கப்பாலேதள்ளுடாகப்பல், இக்குதிசையெங்கும் தள்ளுடாதள்ளு, இருமந்திரஞ்சொல்லி தள்ளுடாகப்பல், பக்கமு

டன்கீழ்மேலும் தள்ளுடாதள்ளு, பரவெளிக்கப்பாலே போகுதடாகப்பல் ஏலேலோ ஏலிலலோ. (௨)

தந்தைதாய் சுற்றமும் சகலமும் மறந்து, தாரம்சகோதரமதானதும்மறந்து, பந்தமும் நேசமும் பாசமும் மறந்து, பதினாலுலோகமும் தன்னையும்மறந்து, இந்திரியர்கள் இரக்ஷித்தகப்பலிலேறி, ஏகாந்தமானதொரு கடலிலேதள்ளி, அந்திரமானவெளி அருளானந்த வெள்ளத்தில் அழுந்துதையாகப்பல் ஏலேலோ ஏலிலலோ. (௩)

காயகப்பல் - முற்றிற்று.